# அரசு இழப்பீடு விவசாயிகளின் நஷ்டத்தை ஈடு செய்யுமா?

எஸ். கல்யாணசுந்தரம்

First Published : 09 Dec 2010 02:41:51 AM IST



திருவாரூர் : காவிரி டெல்டா மாவட்டங்களில் தொடர் மழை, வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்களுக்கு அரசு அறிவித்துள்ள இழப்பீட்டுத் தொகை விவசாயிகளின் நஷ்டத்தை சிறிதளவும் ஈடு செய்யாது. மேலும், பாதிக்கப்பட்ட சாகுபடி பரப்பையும் குறைத்து மதிப்பிடக் கூடாது என்கின்றனர் விவசாயிகள்.

கடந்த நவம்பர் மாத இறுதியில் தொடங்கி, டிசம்பர் மாதத்தில் முதல் வாரம் வரை ஏறத்தாழ 15 தினங்களுக்கு தொடர்ந்து பெய்த பலத்த மழை, அதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஏறத்தாழ 4.10 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்த சம்பா, தாளடி நெல் பயிர்கள் நீரில் மூழ்கிச் சேதமடைந்துள்ளன.

ஆனால், தஞ்சாவூர் மாவட்டத்தில் 30,000 ஹெக்டேர், திருவாரூர் மாவட்டத்தில் 68,000 ஹெக்டேர், நாகை மாவட்டத்தில் 77,000 ஹெக்டேரில் முழுவதும் பயிர்கள் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. மற்றவை 50 சதவீதத்துக்கும் குறைவாகவே மூழ்கியுள்ளதாகவும் அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையில், விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு, இடுபொருள்கள் விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், சாகுபடிச் செலவுகள் பெருமளவில் உயர்ந்துவிட்டன.

நிகழாண்டில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா, தாளடி நெல் பயிர்களுக்கு ஏக்கருக்கு 12,000 - 14,000 வரை செலவு செய்துள்ளதாகக் கூறுகின்றனர் விவசாயிகள். மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பயிர்களுக்கு இழப்பீடாக குறைந்தபட்சம் ஏக்கருக்கு 12,000 வழங்க வேண்டும் என்பதும் அவர்களது வாதம்.

ஆனால், செவ்வாய்க்கிழமை கூடிய தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஹெக்டேருக்கு 8,000 இழப்பீடு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. இது எவ்விதத்திலும் பொருத்தமற்றது என்றார் தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலர் ஆறுபாதி கல்யாணம்.

அவர் மேலும் கூறியது:

நிகழாண்டில் சம்பா சாகுபடி ஏறத்தாழ 30 சதம் மட்டுமே உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்றவை அனைத்தும் பருவம் தவறி செய்யப்பட்டவை. இதில், பயிர்கள் தற்போது சூல் கட்டும் பருவம், பஞ்சு பருவம், பூ பருவம், கதிர் வரும் பருவம், பால் கட்டும் பருவம் எனப் பல்வேறு நிலைகளில் உள்ளன. இவை அனைத்துமே இந்த மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

பயிர்கள் முழுமையாக மூழ்கியதை மட்டுமே மாவட்ட நிர்வாகங்கள் கணக்கில் எடுத்துக் கொண்டு, பாதிப்பு எனப் புள்ளி விவரத்தை அளித்துள்ளன. ஆனால், வெவ்வேறு பருவத்தில் இருந்த பயிர்கள் தற்போது பசுமையாக இருக்கும். ஆனால், இந்தப் பயிர்களுக்கு பல வகைகளிலும் ஊட்டம் அளித்தாலும், மகசூல் இழப்பு ஏறத்தாழ 75 முதல் 80 சதம் வரை ஏற்படும்.

இதனால், விவசாயிகள் தாங்கள் செய்த செலவைக்கூட திரும்பப் பெறும் வகையில் மகசூல் கிடைக்காது. மேலும், பயிர்க் காப்பீடு கணக்கெடுப்பில் காணப்படும் குளறுபடிகளால், விவசாயிகளின் பொருளாதார இழப்பை, காப்பீடு நிறுவனம் வழங்கும் இழப்பீட்டுத் தொகையால் முழுமையாகவும் ஈடு செய்ய இயலாது.

பயிர்கள் பாதிப்புக்கு ஹெக்டேருக்கு 37,500 இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரி வந்த நிலையில், அரசு 8,000 இழப்பீடு வழங்கப்படும் என அறிவித்துள்ளது விவசாயிகளின் இழப்புகளை எவ்விதத்திலும் ஈடு செய்யாது. அதேபோல, பாதிக்கப்பட்ட பயிர்களின் பரப்பளவை அரசு குறைத்து மதிப்பிடக் கூடாது என்றார் அவர்.

தேசிய பேரிடர் நிவாரண நிதியில், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஹெக்டேருக்கு 2,500 மானியமாக வழங்கலாம் என்றிருந்த போது, 2008-ம் ஆண்டில் அதை இரு மடங்கு உயர்த்தி, ஹெக்டேருக்கு 7,500 இழப்பீடாக வழங்கப்பட்டது. இதை விவசாயிகள் அப்போதும் ஏற்றுக்

கொள்ளவில்லை. தற்போது மானியமாக 4,000 வழங்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனாலும், தமிழக அரசு தற்போது ஹெக்டேருக்கு 8,000 மட்டுமே வழங்குவதாக அறிவித்துள்ளது.

முன்பு வழங்கப்பட்டதைப் போல, நிவாரணம் வழங்க முடிவு செய்தாலும், அரசு தற்போது ஹெக்டேருக்கு 12,000 வழங்கியிருக்க வேண்டும் என்பதும் விவசாயிகளின் கருத்தாக உள்ளது.

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களைப் பொருத்தவரையில் அரசு பாதிப்புகளைக் குறைத்து மதிப்பிடுவது, இழப்பீடு வழங்கும் போது விவசாயிகள் மத்தியில் பெரும் பிரச்னையை உருவாக்கும். இது அரசுக்கு பெரும் சிக்கலையும், சங்கடத்தையும் உருவாக்கும்.

மேலும், சாகுபடிச் செலவுக்கு ஏற்ற வகையிலும், விவசாயிகளின் பொருளாதார இழப்புகளை ஈடு செய்யும் வகையிலும் அரசின் இழப்பீடு அமைய வேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்த விவசாயிகளின் கருத்தாக உள்ளது.

## தொடர் மழை: 500 கோடி மதிப்பிலான கண் வலிக் கிழங்கு விவசாயம் பாதிப்பு

ஜி. திருமலைசாமி

First Published : 09 Dec 2010 02:37:36 AM IST



தொடர் மழையால் கருகியுள்ள கண்வலிக் கிழங்கு பூக்கள்.

ஒட்டன்சத்திரம் : தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக 500 கோடி மதிப்பிலான கண்வலிக் கிழங்கு வெள்ளத்தில் மூழ்கியதால், சாகுபடி செய்த விவசாயிகள் நஷ்டத்தில் தவித்து வருகின்றனர்.

தமிழகத்தில் நாகபட்டினம், அரியலூர், தர்மபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், கோவை, திருச்சி, திண்டுக்கல், விருதுநகர், நெல்லை ஆகிய மாவட்டங்களில் மருத்துவக் குணம் வாய்ந்த செங்காந்தள் மலர் என்று சங்க இலக்கியத்தில் சொல்லப்படும் கண்வலிக் கிழங்கு, அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

வணிக ரீதியாக சாகுபடி செய்யப்படும் மூலிகைப் பயிர்களில் அதிக வருமானத்தை ஈட்டித் தரும் இந்த கண்வலிக் கிழங்குக்கு, கலப்பைக் கிழங்கு, செங்காந்தள் மலர், குளோரி லில்லி, சூப்பர் லில்லி, லில்லி மலர், கார்த்திகை கிழங்கு உள்பட பல பெயர்கள் உண்டு.

தமிழகத்தைத் தாயமாகக் கொண்ட இம்மூலிகைப் பயிர், சீனா, இலங்கை, மடகாஸ்கர் என பல்வேறு நாடுகளிலும் பயிரிடப்பட்டு வருகின்றன.

தற்போது, சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வரும் இந்த கண்வலிக் கிழங்கு, தமிழகத்தில் முதன்முதலாக 1980-ல் திருப்பூர் மாவட்டம் மூலனூரிலும், சேலம் மாவட்டம் ஆத்தூரிலும் சாகுபடி செய்யப்பட்டது. நாட்டில் கண்வலிக் கிழங்கு உற்பத்தியில், தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

கண்வலிக் கிழங்கு குடற்புழுக்களைக் கட்டுப்படுத்தவும், பாம்பு மற்றும் தேள் கடிக்கு மருந்தாகவும், வயிற்றுப் புண், மூலம், வீக்கம், தோல் வியாதிகள், தொழுநோய், ஆஸ்துமா மற்றும் பால்வினை நோய்களைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது.

மேலும், இதன் இலைகளை அரைத்து நெற்றியிலும், கழுத்திலும் பற்று வைத்துக் கட்டுவதன் மூலம் சிறுவர்களுக்கு ஏற்படும் ஆஸ்துமா நோய் குணமாவதாகக் கூறப்படுகிறது.

இவற்றின் இலைச் சாற்றினைத் தலையில் தேய்த்து குளிப்பதன் மூலம் பேன், பொடுகு போன்றவற்றிலிருந்து விடுபடலாம். இதன் கிழங்கிலிருந்து 0.7 முதல் 1 சதவீதம் வரை கோல் சிசின் மற்றும் சூப்பர்பிசின் என்ற வேதிப்பொருள் இயந்திரம் மூலம் பிரித்தெடுக்கப்பட்டு, மருந்து தயாரிப்பதற்காக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, மெக்ஸிகோ, ஸ்விட்சர்லாந்து, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவ்வளவு மருத்துவ குணம் வாய்ந்த கண்வலிக் கிழங்கு தற்போது தமிழகம் முழுவதும் பெய்த தொடர் மழையால், பூஞ்சாண நோய் தாக்குதலுக்கு உள்ளாகி, அழுக ஆரம்பித்துள்ளது.

இது குறித்து, அம்பிளிக்கையைச் சேர்ந்த விவசாயி நாச்சிமுத்து கூறியதாவது:

மருத்துவ குணம் வாய்ந்த இந்த கண்வலிக் கிழங்கை பயிர் செய்தால், நல்ல வருமானம்

கிடைக்கும் என்று எண்ணி, கடன் வாங்கி விவசாயம் செய்தேன். ஆனால், தற்போது பெய்து வரும் தொடர் மழையால், சாகுபடிக்கு தயாரான பயிர்கள் அனைத்தும் கருகிவிட்டன.

அதேநேரத்தில், தொடர்ந்து 5 ஆண்டுகள் வரை பலன் தரும் இதன் கிழங்கு, மழை நீரினால் மண்ணில் ஊறி அழுக ஆரம்பித்துள்ளன. இதனால், அடுத்த ஆண்டும் பயிர் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

ஒரு ஏக்கரில் பயிர் செய்ய சொட்டு நீர்ப் பாசனம் அமைத்தல், கிழங்கு விதைத்தல், பந்தல் அமைத்தல், மகரந்த சேர்க்கை, உரம், மருந்து என 5 லட்சம் வரை செலவாகிறது.

இவ்வாறு தமிழகம் முழுவதும் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ள கண்வலிக் கிழங்கு மழை நீரில் மூழ்கியதால், சுமார் 500 கோடி வரை விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசு விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க உடனடியாக முன்வர வேண்டும் என்றார்.

இது குறித்து, தோட்டக்கலைத் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், தொடர் மழையால், கண்வலிக் கிழங்குகள் பூஞ்சாண நோய் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. அதேபோல, காற்றில் உள்ள ஈரப்பதம் சராசரிக்கும் அதிகமாக உள்ளதால், பூ மற்றும் பிஞ்சுக் காய்களில் மழை நீர் தங்கி நோய் கிருமிகளை வளரவிடுகின்றன. இதனால், செடிகள் கருகி பூ மற்றும் பிஞ்சுக் காய்கள் உதிர்ந்து வருகின்றன. மேலும், அறுவடைக்குத் தயாராக உள்ள காய்களும் பாதிக்கப்பட்டுள்ளன. மழை அதிகம் பெய்துள்ள பல மாவட்டங்களில் கண்வலிக் கிழங்கு விவசாயம் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

**நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகள்...**

First Published : 09 Dec 2010 12:55:59 AM IST



காஞ்சிபுரம் : நெற்பயிரை நடவு செய்தது முதல் வளர்ந்து கதிர் வருவதுவரை பல்வேறு பூச்சிகள் தாக்குகின்றன. இந் நெற்பயிரை தாக்கும் பூச்சிகளை சரியான அளவில் பூச்சிக் கொல்லி மருந்துகளை உபயோகித்து அழிக்க வேண்டும்.

நெற்பயிர்களில் இலைப்பேன் என்ற பூச்சி நாற்றங்கால் மற்றும் நடவு வயல்களில் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த பூச்சிகள் இளம் இலைகளை சுரண்டி சாற்றை உறிஞ்சும். இந்த பூச்சிகளை பாஸ்போபிடான், மோனோகுரோட்டோபாஸ், எண்டோ சல்பான் ஆகிய மருந்துகளை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

தண்டுத் துளைப்பான் தாக்கும்போது நுணிக் குருத்து காய்ந்துவிடும். இப் பூச்சிகளை அழிக்க தொடர்ச்சியாக வயலில் நீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும். பாதிக்கப்பட்ட கதிர்களை பிடுங்கி அகற்ற வேண்டும். விளக்குப் பொறிகளை அமைத்து அப் பூச்சிகளை அழிக்கலாம்.

நெற் பயிர்கள் வளர்ந்து வரும்போது கூட்டுப் புழுக்கள் இலையில் உள்ள பச்சையத்தை தின்றுவிடும். இதனால் பயிர் வெள்ளை நிற சருகுபோல் மாறிவிடும். எண்டோசல்பானுடன் மண்ணெண்ணெயை கலந்து தெளித்து இந்த புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

வெட்டுப் புழுக்கள் நாற்றுகளை அதிக அளவில் வெட்டித் திண்ணும். இரவு நேரங்களில் இந்த புழுக்கள் கூட்டம், கூட்டமாக அருகே உள்ள வயல்களுக்குச் செல்லும். பாசன நீருடன் மண்ணெண்ணெய் கலப்பதன் மூலம் இதனை கட்டுப்படுத்தலாம். வயலில் வாத்துக்களை விட்டும் இப் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

இலை சுருட்டுப் புழு இலைகளை சுருட்டி அதில் உள்ள பச்சையத்தை உண்ணும் தன்மை கொண்டது. இது தாக்கப்பட்டால் பயிர் வளர்ச்சி குன்றி கதிர் வராது. எண்டோசல்பான், மோனோகுரோடோபாஸ் தெளித்து இப் பூச்சிகளை கடுப்படுத்தலாம்.

இதுபோல் பல்வேறு வகையான பூச்சிகள் நெற்பயிர்களை தாக்குகின்றன. இவைகளை கட்டுப்படுத்துவதற்காக பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்தும்போது விவசாயிகள் சரியான அளவில் பயன்படுத்த வேண்டும். அதிக பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதால் மண்ணின் வளம் பாதிக்கப்படும். இயற்கையான முறையில் கூட பூச்சிகளை கட்டுப்படுத்த பல்வேறு வழிகள் உள்ளன என்று காஞ்சிபுரம் வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

**வெளிநாட்டு தொழில்நுட்பத்தில் சவுக்குக் கன்றுகள் உற்பத்தி செய்யும் விவசாயி**

First Published : 09 Dec 2010 12:51:00 AM IST

Last Updated : 09 Dec 2010 12:51:51 AM IST



ஆஸ்திரேலியா முறையில் புதுச்சேரி கூடப்பாக்கத்தைச் சேர்ந்த வெங்கடபதி ரெட்டியார் (படம்) வளர்க்கும் சவுக்கு நாற்றுகள்.

புதுச்சேரி: இப்போது மழை பெய்து ஓய்ந்திருக்கிறது. சவுக்குப் பயிரிட இது உகந்த காலம். வேலையாள்கள் கிடைப்பதில் சிரமம், சாகுபடி செய்வதில் பிரச்னை காரணமாக ஆயிரக்கணக்கான விவசாய நிலங்களில் இப்போது சவுக்குப் பயிரிடப்படுகிறது.

சவுக்குச் சாகுபடிக்கு நாற்று தேர்வு செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பலர் அருகில் கிடைக்கும் சவுக்கு நாற்றுகளை வாங்கி நடுகின்றனர். குறிப்பிட்ட சவுக்கு நாற்று பின்னாளில் எப்படி சாகுபடி கொடுக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது. இப்போது சவுக்குச் சாகுபடியில் பல்வேறு வீரிய ரகங்கள் வந்துள்ளன. குறிப்பாக வறட்சியைத் தாக்குப் பிடிக்கும் அளவுக்கு சவுக்கு நாற்றுகள் கிடைக்கின்றன.

திசு வளர்ப்பு முறையில் கனகாம்பரம் பூவில் பல்வேறு புதிய ரகங்களை உருவாக்கிய புதுச்சேரி கூடப்பாக்கத்தைச் சேர்ந்த விவசாயி வெங்கடபதி ரெட்டியார் சவுக்கு நாற்று உற்பத்தியிலும் முத்திரை பதித்துள்ளார். அவர் உருவாக்கிய சவுக்கு ரகங்கள் ஆந்திர மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகள் நடுவதற்கு அங்குள்ள அரசே பரிந்துரை செய்து வாங்கிக் கொடுத்துள்ளது.

சவுக்கு நாற்றுகள் உற்பத்தியில் விதை போட்டு உருவாக்கும் முறை இன்னும் இருக்கிறது. அந்த நாற்றுகள் விலை குறைவு. இது பாரம்பரிய நாற்று. இதிலிருந்து மகசூலும் குறைவாகதான் இருக்கும். இது விதையிலிருந்து வேர் உருவாக்கும் முறை. இதிலிருந்து மாறுபட்டு சவுக்கு நாற்றுகளை புதிய முறையில் உற்பத்தி செய்துள்ளார் வெங்கடபதி ரெட்டியார். அதாவது சவுக்குக் கிளைகளிலிருந்து வேர் உருவாக்குவது இந்தப் புதிய முறை. இதிலும் இவர் 2 முறைகளைக் கையாண்டுள்ளார். இப்போது 3-வது முறையிலும் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

முதலில் 3 முதல் 5 மாதம் கொண்ட சவுக்குப் பக்கக் கிளைகளை வெட்டி ஐபிஏ கலவையில் (வேர் ஊக்கி) நனைத்து வேர் உருவாக்கினார். இதிலிருந்து சாகுபடி செய்யப்பட்ட சவுக்கு ரகங்கள் சின்னது, பெரியதாக இருந்தன. இதைப் போக்கும் வகையில் ஆஸ்திரேலியா முறையில் இலைகளை வெட்டி எடுத்து அதிலிருந்து வேர் உருவாக்கி நாற்று உற்பத்தி செய்து வருகிறார். இது வீரிய ரகம்.

இந்த முறையில் சவுக்கு நாற்றுகளை உருவாக்க கிரீன் ஹவுஸ் அமைத்து அதில் தாய்ச் செடிகளை வளர்த்து வருகிறார் இந்த விவசாய விஞ்ஞானி. அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் தொடர் முயற்சியாக சீனா அரசு பண்ணையில் எளிமையான முறையில் சவுக்கு நாற்று உற்பத்தி செய்யப்படுவதாக இணையதளத்தின் மூலம் அறிந்தார்.


இணையதளத்தின் மூலம் பல்வேறு தகவல்களைக் கேட்டுப் பெற்று இப்போது அந்த முறையில் நாற்று உற்பத்தி செய்யும் சோதனையில் ஈடுபட்டுள்ளார் வெங்கடபதி ரெட்டியார். சீன முறையில் பிளாஸ்டிக் டம்பளரில் பாதி அளவு தண்ணீர் எடுத்து அதில் வெட்டப்பட்ட பக்கக் கிளைகள் கொண்ட துணுக்குகளைக் கட்டுக்கட்டாக கட்டி டம்பளரில் ஐபிஏ கலவையை ஊற்றி 24 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். மறுநாள் எடுத்து புதிய டம்பளரில் பாதி அளவு தண்ணீர் ஊற்றி இந்தக் கட்டை அதில் போட்டுவிட வேண்டும். இப்படி தினந்தோறும் தண்ணீர் மாற்ற வேண்டும். இதில் 8 முதல் 15 நாளில் வேர் வந்துவிடும். இந்த முறையில் குறைந்த இடத்தில் அதிக நாற்றுகள் உற்பத்தி செய்ய முடியும். ÷வேலையாள்கள் குறைவு. விலையும் குறைவாகக் கொடுக்கலாம். இதற்கு குழாயில் வரும் தண்ணீர் பயன்படுத்தக்கூடாது. அதில் குளோரின் கலந்துள்ளால் இந்தத் தண்ணீரில் நாற்று அழுகிவிடும். நன்கு ஆட்டோகிளோவில் வடிகட்டப்பட்ட தண்ணீரைதான் பயன்படுத்த வேண்டும்.

இனிமேல் எந்த முறையில் சவுக்கு நாற்று உற்பத்தி செய்வீர்கள் என்று வெங்கடபதியிடம் கேட்டதற்கு, இப்போதைக்கு ஆஸ்திரேலியா, சீனா இரண்டு முறையிலும் சவுக்கு நாற்று உற்பத்தி

செய்வேன். விவசாயிகளுக்கு விலை குறைவாக தரமான சவுக்கு நாற்றுகளை எந்த முறையில் கொடுக்க முடியுமோ அந்த முறையைத் தொடருவேன் என்றார் அவர்.

**தென்னையின் சிறந்த ஊடுபயிர் திப்பிலி**

First Published : 09 Dec 2010 12:26:00 AM IST



கடலூர்: உலகில் 80-க்கும் மேற்பட்ட நாடுகளில் தென்னை பயிரிடப்படுகிறது. இந்தியாவில் பிரதான தோட்டப் பயிராக, தென்னை 2 மில்லியன் ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 9.75 லட்சம் ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

அண்மைக்காலமாக தமிழ்நாட்டில் தென்னை சாகுபடியில் லாபம் இல்லை என்ற கருத்து விவசாயிகள் மத்தியில் நிலவி வருகிறது.

இந்தியாவின் கொப்பரைத் தேங்காய் இறக்குமதிக் கொள்கை, தமிழகத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதலுக்கு அரசு முறையான நடவடிக்கைகளை எடுக்காதது போன்ற காரணங்களே தென்னை விவசாயிகளை மேற்கண்டவாறு சிந்திக்க வைத்து உள்ளது.

கள் இறக்கினால் கூடுதல் ஆதாயம் பெறமுடியும் என்ற நோக்கத்திலும், தென்னை மரங்களில் கள் இறக்க அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

தற்போது தென்னையில் சாகுபடியில் கூடுதல் வருவாய் ஈட்ட, தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக மருந்துப் பொருளான திப்பிலியைப் பயிரிடலாம் என்று முன்னேடி விவசாயிகள் பலர் கருத்து தெரிவிக்கிறார்கள். நேபாளம், மலேசியா, சிங்கப்பூர், ஜாவா, இந்தியாவில் அஸ்ஸôம், கேரளம் உள்ளிட்ட மாநிலங்களில் திப்பிலி பெருமளவுக்குப் பயிரிடப்படுகிறது.

திப்பிலி இந்திய மருத்துவத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. உணவு, மருந்து, வாசனப்பொருள்கள் மற்றும் மதுபானங்களில் திப்பிலி பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

அனைத்து இருமல் மருந்துகளிலும் திப்பிலி சேர்க்கப்படுகிறது. கபம், கோழை, இருமல், ஜுரம் உள்ளிட்ட நோய்களுக்கு திப்பிலி சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

திப்பிலியில் இருந்து எய்ட்ஸ் மற்றும் தொழுநோய்க்கு அண்மையில் மருந்து கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. மிகுந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது திப்பிலி.

இந்தியாவில் திப்பிலியின் ஆண்டுத் தேவை 700 டன்கள். ஆண்டுதோறும் இதன் தேவை அதிகரித்து வருகிறது. தேவையைப் பூர்த்தி செய்ய அதிக அளவில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது இந்தியா.

திப்பிலிக் கொடி, செடி என்ற இருவகைகள் கொண்ட நீண்டகாலப் பயிர். வெற்றிலையில் உள்ள காரத்தன்மையும், கருமிளகைவிட அதிக காரத்தன்மையும் கொண்டது திப்பிலி. தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் பெருமளவில் திப்பிலி பயிரிடப்படுகிறது. இதைப் பயிரிடுவதற்கு நிழல் அவசியம்.

எனவே சமவெளிப் பகுதிகளில் தென்னந்தோப்புகளிலும், பாக்குமரத் தோப்புகளிலும் பயிரிட ஏற்றதாக திப்பிலி உள்ளது.

வாழைத் தோப்புகளிலும் சவுக்குத் தோப்புகளிலும் திப்பிலி பயிரிடலாம் என்று வேளாண் அலுவலர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

திப்பிலியை கணுக்கள் கொண்ட தண்டுகள் மூலம், பயிர் பெருக்கம் செய்யப்படுகிறது. கொடிகளில் நுனி மற்றும் நடுப் பகுதி தண்டுகளில் உள்ள கணுக்கள் பயிர் பெருக்கத்துக்குச் சிறந்தவை.

நட்டு 60 நாளில் வேர் பிடிக்கும். நிலத்தை நன்றாக உழுது, மலைப் பகுதி என்றால் ஹெக்டேருக்கு 10 டன், சமவெளிப் பகுதியாக இருந்தால் 25 டன் தொழு உரமிட்டு நிலத்தைத் தயார் செய்ய வேண்டும்.

தோப்புகளில் 3 அடி இடைவெளியில் பார் அமைத்து, ஒரு அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். ஆண்டுக்கு இருமுறை ஹெக்டேருக்கு 100 கிலோ தழைச்சத்து, 80 கிலோ சாம்பல் சத்து கொண்ட உரமிட வேண்டும்.

தென்னந்தோப்புகளில் வாரம் ஒருமுறை நீர் பாய்ச்சினால் போதும். தென்னைக்கு பாய்ச்சும் நீர், அளிக்கும் உரம், திப்பிலிக்கும் போதுமானது.

திப்பிலி நட்டு முதலாம் ஆண்டில் 750 கிலோவும், 2-ம் ஆண்டு முதல் 1500 கிலோவும் மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். அதிக செலவு இல்லாமல், தென்னை சாகுபடியில் ஏக்கருக்கு, ஆண்டுக்கு  12 ஆயிரம் வரை கூடுதல் வருவாய் ஈட்ட முடியும் என்றும், இதன் மூலம் தென்னை விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்ற முடியும் என்றும் தெரிவிக்கிறார்கள்.

இது குறித்து மருந்துப் பயிர்கள் உற்பத்தியாளர்கள் சங்க மாவட்டப் பொதுச் செயலர் தணிகாச்சலம் கூறுகையில், "தென்னந்தோப்புகளில் திப்பிலி பயிருடுவதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கும்.

இதன்மூலம் தென்னை விவசாயத்தை அதிக லாபம் உள்ள தொழிலாக மாற்றலாம். ஆந்திரத்தில் எண்ணெய்ப் பனையில் ஊடுபயிராக திப்பிலியைச் சாகுபடி செய்கிறார்கள்.

திப்பிலி விவசாயத்துக்குக் கொடியை விட செடி சிறந்தது. கேரளத்தில் தற்போது கொடியை விட, திப்பிலிச் செடி அதிகம் பயிரிடப்படுகிறது. மருந்துப் பயிர்களுக்கு அரசு மானியம் உள்ளது. சந்தை

வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுத்தால் திப்பிலி பயிரிடுவது சுலபமான, லாபகரமான விவசாயம்' என்றார்.

**உரங்களை அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை: இணை இயக்குநர் ராமகிருஷ்ணன்**

First Published : 09 Dec 2010 09:20:13 AM IST

விழுப்புரம், டிச. 8: உரங்களை அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மை இணை இயக்குநர் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

÷விழுப்புரம் மாவட்டத்தில் பரவலாக அனைத்து பகுதிகளிலும் நல்ல மழை பெய்துள்ள நிலையில் பயிர் சாகுபடிப் பணிகளை துரிதமாக விவாசாயிகள் மேற்கொண்டுள்ளனர். மேலும் தேவையான அனைத்து வகை உரங்களும் மாவட்டத்தில் போதுமான அளவில் இருப்பு உள்ளது.

÷குறிப்பாக மழைக்குப் பின் சம்பா நெல் நடவுப் பணிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்படுவதால், அடி உரத்துக்கு தேவையான டிஏபி, 20:20, 16:20, 10:26:26, 14:35:14, உரங்கள் நமது மாவட்டத்தில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

÷எனவே விவசாயிகள் தங்களுக்கு தேவையான அனைத்து உரங்களையும் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும், அந்தந்த பகுதி தனியார் உரக் கடைகளிலும் அரசு அனுமதித்தவாறு உர மூட்டைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள விற்பனை விலைக்கு மிகாமல் பெற்று பயனடையலாம்.

÷மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் தனியார் உரக் கடைகளில் அந்தந்த பகுதி விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி உரிய விலையில் வழங்கப்பட வேண்டும்.

நிறுவனம் மற்றும் மொத்த விற்பனையாளர்களிடமிருந்து வரப்பெறும் உரங்களை இருப்புப் பதிவேட்டில் இருப்பு வைத்து விவசாயிகளுக்கு எவ்வித தடையும் இன்றி அனுமதித்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டும்.

÷மாவட்டத்தில் எந்த உர விற்பனை நிலையமாவது உர உரிமம் இன்றியோ, உரிய பதிவேடுகளை பராமரிக்காமலோ அல்லது விவசாயிகளுக்கு வழங்கும் உரங்களுக்கு உரிய பட்டியல் வழங்காமலோ இருப்பது தெரியவந்தால், அந்த உர விற்பனை நிலையம் மீதான உரிமம் ரத்து செய்யப்படும். மேலும் எந்த உரத்தையும் அரசு மனுமதித்த விலைக்கு கூடுதலாக விற்பனை செய்வதாக தெரியவந்தாலும் விவசாயிகளிடமிருந்து புகார் பெறப்பட்டாலும் உர உரிமம் ரத்து செய்வதோடு நீதிமன்ற வழக்கு தொடரப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## 15-ம் தேதிக்குள் பயிர் காப்பீடு ஆட்சியர் வேண்டுகோள்

First Published : 09 Dec 2010 09:14:36 AM IST

கடலூர், டிச. 8: டிசம்பர் 15-ம் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்து கொள்ளுமாறு, விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

÷ஆட்சியர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

÷கடலூர் மாவட்ட விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து, அதன்மூலம் மத்திய, மாநில அரசுகளின் காப்பீட்டுத் தொகை பெற்று, பயன் அடையலாம். கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்றவர்கள் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். காப்பீட்டு பிரீமியம் தொகை செலுத்துவதற்கு, வட்டாட்சியர் அலுவலகங்களில் உடனுக்குடன் சிட்டா அடங்கல் வழங்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

÷கடலூர் மாவட்டத்தில் உள்ள 16 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பயிர் காப்பீட்டுக்கான சிட்டா நகல்களைப் பெற்று, விவசாயிகள் காப்பீடு செய்யலாம். கடலூர் மாவட்ட விவசாயிகள் இந்த வாய்பினை பயன்படுத்தி, இம்மாதம் 15-ம் தேதிக்குள் பயிர் காப்பீட்டினை செய்து பயன் பெறலாம்.

÷மாவட்டத்தி0ல் வேளாண் நிலங்களில் தேங்கி உள்ள தண்ணீரை உடனடியாக வடிக்க வேண்டும். பயிர்களில் நோய் தாக்கும் வாய்ப்பு உள்ளதால், வேளாண் அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, இடுபொருள்களைப் பெற்று, முறையாக மேலாண்மை செய்யுமாறும் விவசாயிகளுக்கு ஆட்சியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## "80 கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் இயந்திர சேவை மையங்கள்'

First Published : 08 Dec 2010 11:36:36 AM IST

நாமக்கல், டிச. 7: நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 80 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் இயந்திர சேவை மையங்கள் அமைக்கப்பட உள்ளதாக வேளாண்மை பொறியியல்துறை நிர்வாக பொறியாளர் அறிவழகன் கூறினார்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் வேளாண் சேவை மையங்கள் நடைமுறைப்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் மாவட்டம், கவின் கிஷோர் திருமண மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் வேளாண்மை பொறியியல்துறை நிர்வாக பொறியாளர் அறிவழகன் பேசியது:

மனித குலத்தின் மூத்த தொழில் வேளாண்மை. இன்றைய நவீன காலத்தில் சிறந்த தொழில்நுட்பங்கள், இயந்திரங்கள், குறைந்த மனித சக்தி, அதிக முதலீடு கொண்ட வேளாண்மை தேவைப்படுகிறது.

இவற்றில் மிகவும் இன்றியமையாததாக உள்ளது இயந்திரங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள்.

வேளாண் உற்பத்தியை பெருக்க, உற்பத்தி செலவை குறைத்து விவசாய வருமானத்தை அதிகரிக்க வேளாண்மையை முழுவதுமாக இயந்திரமாக்குவது அவசியம்.

எனவே, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 80 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் இயந்திர சேவை மையங்கள் விரைவில் அமைக்கப்படும்.

இம்மையங்களில் விவசாயிகளுக்கு தேவையான பவர் டில்லர்கள், நெல் நடவு இயந்திரங்கள், ரோட்டா வீடர்கள் மானிய விலையில் வழங்கப்படும். இதை வாங்கும் விவசாயிகள், அவற்றை வாடகைக்கு விட்டு லாபம் சம்பாதிக்கலாம் என்றார்.

தினமலர்

**தேங்காய் பருப்பு வரத்து உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2010,02:26 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் மழை சற்று ஓய்ந்திருப்பதால், ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நடப்பு வாரம் தேங்காய் பருப்பு வரத்து சற்று அதிகரித்தது. ஒரு மாதமாக கோபியில் மழை பெய்தது. தேங்காய் பருப்பை முழுமையாக காய வைக்க முடியாமல் விவசாயிகள் திணறினர். தேங்காய் பருப்பு வரத்து குறைவால் விலை 50 ரூபாயை தாண்டியது. சென்ற வாரம் 154 மூட்டை ஏலத்துக்கு வந்தது. நடப்பு வாரம் 215 மூட்டை ஏலத்துக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோ 54.29 ரூபாய், குறைந்தபட்சமாக 52.87 ரூபாய், சராசரியாக 53.87 ரூபாய்க்கு விற்றது. விலை 98 பைசா வரை குறைந்தது. மொத்தம் ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பில் வர்த்தகம் நடந்தது.

**விவசாய சாகுபடி செலவு அதிகரிப்பு : நஷ்டத்தை தவிர்க்க விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2010,00:35 IST

குளித்தலை: குளித்தலை பகுதியில் அதிகரிக்கும் சாகுபடி செலவு காரணமாக, தேவையான வருவாய் கிடைக்காமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

குளித்தலை காவிரி டெல்டா பகுதியில் தற்போது தீவிர நெல் நடவுப்பணி நடக்கிறது. கடந்தாண்டு நெல் சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு உழவு கூலி பவர் டில்லர் 2,000 ரூபாய், நிலம் சமம் செய்ய 400 ரூபாய், வரப்பு வெட்டுதல் 600 ரூபாய், நடவு செய்யக்கூலி 700 ரூபாய் என மொத்தம் 3,700 ரூபாய் வரை செலவானது. தற்போது விலைவாசி ஏற்றம், டீஸல் விலையேற்றம், விதை நெல், உரம், இடுபொருள் விலையேற்றம் மறுபுறம் விவசாயிக்கு கூடுதல் நெருக்கடியை அளிக்கிறது. ஒரு ஏக்கருக்கு நெல் நடவு செய்ய தற்போது 4,500 ரூபாய் வரையாகிறது. ஒரு ஏக்கருக்கு இரு முறை உரம்போடுவதுக்கு 4,000 ரூபாய், பூச்சிக்கொல்லி மருந்து 300 ரூபாய், எலி விரட்டி 300 ரூபாய் என தற்போது சாகுபடி செலவு 10 ஆயிரத்திலிருந்து, 12 ஆயிரம் ரூபாய் வரை தேவைப்படுகிறது.

ஆனால், நெல் அறுவடை செய்யும்போது எதிர்பார்த்த வருவாய் விவசாயிக்கு கிடைப்பதில்லை. இப்பகுதியில் அரசு கொள்முதல் நிலையம் அமைக்கப்படாத பட்சம், விவசாயத்துக்கு பெற்ற கடனை திருப்பியளிக்க, இடைதரகர்களுக்கு குறைந்த விலையில் நெல் விற்பனை செய்யப்பட வேண்டிய கட்டாயத்துக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். விவசாயம் செய்தும், கடனாளியாகவும், பயிரிட்ட நெல்லை முற்றிலும் விற்க வேண்டிய சூழ்நிலையிலும் விவசாயிகள் தவிக்கின்றனர். கூலித்தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வருவாய்கூட, விவசாயிக்கு கிடைப்பதில்லை என்று புலம்புகின்றனர். நெல் கொள்முதலை அரசு தீவிரப்படுத்தி, விவசாயிகள் குறைதீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

**தென்மாவட்டங்களில் தக்காளி விலை உயர்வு! உற்பத்தி பாதிப்பால் திடீர் ஏற்றம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2010,00:51 IST

ஓசூர்: தென்மாவட்டங்களில் மழை சேதத்தால் தக்காளி உற்பத்தி அடியோடு பாதிக்கப்பட்டுள்ளதால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தக்காளி விலை திடீரென்று கிலோ 25 ரூபாயாக உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை உணவுப்பயிர்களில் மா சாகுபடிக்கு அடுத்தப்படியாக காய்கறிகளை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்கின்றனர். மாவட்டத்தில் 9,773 ஹெக்டேரில் காய்கறிகள் சாகுபடி நடக்கிறது. குறிப்பாக வீரிய ஓட்டு தக்காளி பயிர் 5,000 ஹெக்டேரில் ஆண்டு முழுவதும் சுழற்சி முறையில் சாகுபடி செய்யப்படுகிறது. ஓசூர் அடுத்த ராயக்கோட்டை, பத்தலப்பள்ளி ஆகிய இடங்களில் தக்காளிக்கு மிக பெரிய சந்தை செயல்படுகிறது.

தினசரி கூடும் இந்த சந்தைகளில் ஓசூர், தேன்கனிக்கோட்டை, பாகலூர், பேரிகை, சூளகிரி,

உத்தனப்பள்ளி, ராயக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி சுற்றுவட்டார விவசாயிகள் தக்காளியை அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இங்கு இருந்து வெளிமாநிலங்களுக்கும், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு தக்காளி ஏற்றுமதியாகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரலவான மழை பெய்து வருகிறது. கடும் பனிப்பொழிவும், பனிக்காற்றும் அடிப்பதால் விவசாய பயிர்கள் சேதமடைந்துள்ளது. மற்ற மாவட்டங்களில் கன மழையால் தக்காளி உற்பத்தி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.
இதனால், வெளி மாவட்டங்களின் தக்காளி தேவை முழுக்க முழுக்க கிருஷ்ணகிரி மாவட்டத்தை சார்ந்துள்ளது. தக்காளி விலை கடந்த சில நாளாக "கிடுகிடு'வென உயர்ந்து கிலோ 25 ரூபாய்க்கு விற்பனையாகிறது. 20 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி 500 ரூபாயக்கு விற்பனையாகிறது. மழை சேதத்தால் ஓசூர் உழவர்சந்தை, பத்தலப்பள்ளி மார்க்கெட், ராயக்கோட்டை மார்க்கெட் மற்றும் உள்ளூர் சந்தைகளில் தக்காளி வரத்து குறைந்திருப்பதும் விலை உயர்வுக்கு காரணமாக உள்ளது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஓசூர் அச்செட்டிப்பள்ளியை சேர்ந்த விவசாயி கோபால்ரெட்டி நமது நிருபரிடம் கூறியதாவது: இரண்டரை ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்துள்ளேன். இதற்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவாகியுள்ளது. மழையால் உற்பத்தி பாதிக்கப்பட்டாலும், நல்ல விலை கிடைப்பதால் மகிழ்ச்சியடைந்துள்ளோம். இதே விலை நீடித்தால் இரண்டரை ஏக்கர் சாகுபடியில் 5 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. மழை சேதம் ஏற்படாமல் இருந்தால் தினசரி அறுவடை செய்து இருக்கலாம். 15,000 டன் வரை மகசூல் கிடைத்து இருக்க வாய்ப்பு இருந்தது. தற்போது மழைசேதத்தால் மூன்று நாளுக்கு ஒரு முறை அறுவடை செய்து வருகிறோம். இந்த அறுவடை காலத்தில் 10,000 டன் தக்காளி கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

பொதுவாக நான்கு நாள் தண்ணீர் நின்றால் தக்காளி செடி அழுகிவிடும். தற்போது மழை விட்டு விட்டு பெய்வதால் ஓரளவு செடிகள் தாக்குப்பிடித்து வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.
மேலும் விலை உயரும் : இது குறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறியது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று மாதத்துக்கு முன் நடவு செய்யப்பட்ட வீரிய ஒட்டுரக தக்காளி செடிகளில் அறுவடை துவங்கும் நேரத்தில் கடந்த ஒரு வார காலமாக மழை பெய்து வருவதால் தக்காளி சாகுபடி 100 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்து விலையேற்றம் அடைந்துள்ளது. மழை குறைந்த பின் புதியதாக தக்காளி செடிகளை நட்டு அதன் மூலம் அறுவடை செய்யப்படும் தக்காளி வரும் வரையில் தொடர்ந்து விலையேற்றம் இருக்கும். தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அங்கு தக்காளிக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இதனை பயன்படுத்திக்கொள்ளும் மொத்த வியாபாரிகள் வெளி மாவட்டங்களுக்கு அதிக அளவில் விற்பனைக்கு அனுப்புவதால் விலை தொடர்ந்து உயர வாய்ப்புள்ளது.

**சம்பா சாகுபடி நெற்பயிருக்கு காப்புறுதி : கூட்டுறவு வங்கி தனி அலுவலர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,23:38 IST

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடி நெற்பயிருக்கு வரும் 31ம் தேதிக்குள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் காப்புறுதி செய்து கொள்ளலாம் என மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் மிருணாளினி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் சம்பா, தாளடி, பிசானம் நெல் (2) சம்பா பயிருக்கு பயிர் காப்புறுதித் திட்டத்தை நடப்பு ஆண்டிற்கு செயல்படுத்தலாம் என இந்திய வேளாண்மை காப்பீட்டு நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மாவட்டத்தில சம்பா நெற்பயிருக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெற்ற கடன் தொகையை பயிர் காப்பீடு திட்டத்தில் கடந்த 1.8.2010 முதல் 31.12.2010 வரை காப்புறுதி செய்து கொள்ளலாம்.

மேலும் கடன் பெறாத விவசாயிகள் தக்க ஆவணங்கள் கொடுத்து சம்பா நெற்பயிருக்கு 1.8.2010 முதல் 15.12.2010 வரை காப்புறுதி செய்து கொள்ளலாம். காப்புறுதி செய்யும் தொகைக்கு 2 சதவீதம் பரிமியம் செலுத்த வேண்டும். பிரிமியத் தொகையில் சிறு, குறு விவசாயிகளுக்கு கடன் பெற்றவர்களுக்கு அரசால் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு பிரிமியத் தொகையில் 55 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி நெல் சம்பா பயிருக்கு பயிர் காப்புறுதி செய்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**தோட்டக்கலைத் துறை பணிமனை பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,23:54 IST

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை பி.டி.ஓ., அலுவலகத்தில் தோட்டக்கலை சார்பில் முன்னோடி விவசாயிகளுக்கான வட்டார பணி மனை பயிற்சிக்கூட்டம் நடந்தது.ஒன்றிய சேர்மன் சின்னையன் தலைமை தாங்கினார். பேரூராட்சி தலைவர் ராதாகிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர் விஸ்வநாதன் முன்னிலை வகித்தனர். தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் நிர்மலா வரவேற்றார்.

வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் ரேணுகா, உதவி வேளாண் அலுவலர்கள் அன்பழகன்,

மதன்ராஜ் காய்கறி, மஞ்சள், மா சாகுபடி குறித்து பயிற்சி அளித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் நடராஜன், முருகன் செய்திருந்தனர்.

**கோழித் தீவனத்துக்கு 8.5 லட்சம் டன் மக்காச்சோளம் தேவை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,02:57 IST

நாமக்கல்: "தமிழகத்தில் கோழித் தீவனம் உற்பத்திக்கு 8.5 லட்சம் டன் மக்காச்சோளம் தேவைப்படுகிறது. ஆனால், 4 லட்சம் டன் மக்காச்சோளம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது' என, வேளாண் துணை இயக்குனர் சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: சர்வதேச மற்றும் உள்நாட்டு சந்தையில் மக்காச்சோளத்தின் விலை உயர்ந்துள்ளது. உலக மக்காச்சோள உற்பத்தியில் இந்தியா ஐந்தாவது இடத்தை வகிக்கிறது. ஒவ்வொரு வர்த்தக ஆண்டிலும் 1 முதல் மூன்று மில்லியன் டன்கள் வரை ஏற்றுமதி செய்கிறது. தவிர, 2009-10ம் ஆண்டு இந்தியா 16. 68 மில்லியன் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்தது. நல்ல பருவமழை, நல்ல விதை ஆகியவற்றால் இந்தாண்டு உற்பத்தி 14 சதவீதம் அதிகரித்து, 19 மில்லியன் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நம் நாட்டில் மக்காச்சோளத்தின் தேவை ஐந்து சதவீதம் அதிகரித்து 16 மில்லியன் டன்களாக உள்ளது.வர்த்தக தகவல்களின்படி 2009-10ல் இந்தியா 2.5 மில்லியன் டன்கள் ஏற்றுமதி செய்துள்ளது. ஏற்றுமதி அதிகரித்து 2.7 மில்லியன் டன்களாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் மக்காச்சோளம் இரண்டு லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்படுகிறது. மக்காச்சோளத்துக்கு கார்த்திகை பட்டம் முக்கிய பருவம். தமிழக சந்தைகளில் டிசம்பர் மாதம் முதல் மக்காச்சோளம் வரத்து துவங்கி ஏப்ரல் மாதம் வரை இருக்கும். வர்த்தக தகவல்படி தமிழகத்தில் உள்ள கோழிப்பண்ணைகளின் தீவனத்திற்காக 8 முதல் 8.5 லட்சம் டன் மக்காச்சோளம் தேவைப்படுகிறது. ஆனால் 4 லட்சம் டன் மட்டுமே மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது, தரமான மக்காச்சோளம் ஒரு குவிண்டால் 925 முதல் 975 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண் பல்கலையில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின் ஆய்வின்படி 2011வரை இந்த விலையே நிலவும். ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரித்து, உள்ளாட்டு தேவை ஆகியவை மக்காச்சோளத்தின் விலையை சீராக வைத்திருக்கும். அதன் பின் விலை உயர வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நாமக்கல் மாவட்ட விவசாயிகள், பருவமழையை பயன்படுத்தி

கார்த்திகை பட்டத்தில் மக்காச்சோள சாகுபடி செய்து பயன்பெறலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு விண்ணப்பம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,21:29 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்: தென்னை விவசாயிகள் நல வாரியத்தில், உறுப்பினராக பதிவு செய்தவற்கான விண்ணப்பங்கள் தோட்டக்கலை துறை சார்பில் வழங்கப்படுகிறது. பயோ டேட்டா மற்றும் சாகுபடி பற்றிய அனைத்து விபரங்களை அதில் குறிப்பிட வேண்டும். ஆண்டு அடிப்படையில் மரங்களின் எண்ணிக்கை, கொப்பரை தேங்காய் கொள்முதல், தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்ட விபரம், குடும்ப உறுப்பினர்கள் விபரங்களை தெரிவிக்க வேண்டும்

**மழையால் காய்கறி வரத்து முடக்கம்:சந்தையில் இஷ்டத்துக்கு விலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,23:28 IST

சிவகங்கை: தொடர் மழையால், சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி வரத்து குறைந்துள்ளது. இதை சாதகமாக்கி, வியாபாரிகள் இஷ்டத்திற்கு விலையை உயர்த்தியுள்ளனர்.
சந்தையில் நேற்றைய விலை
(கிலோ): கடந்த வாரம் 30 க்கு விற்ற கத்தரி- 80; 20 க்கு விற்ற வெண்டைக்காய் -24; பாகற்காய்- 20; 30 க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 40; 20 க்கு விற்ற கேரட் -40; 18க்கு விற்ற முள்ளங்கி- 24; 24 க்கு விற்ற உருளை கிழங்கு- 40; முட்டை கோஸ்- 15; தக்காளி-20; கருணை கிழங்கு- 30; 30 க்கு விற்ற இஞ்சி- 60; 30 க்கு விற்ற அவரைக்காய்- 40; 60 க்கு விற்ற பட்டர் பீன்ஸ்- 100; 20 க்கு விற்ற வெங்காயம்- 30; பெல்லாரி- 30; 20 க்கு விற்ற காலி பிளவர்- 20; சேணை கிழங்கு- 30; சேம்பு- 30; 18 க்கு விற்ற பச்சை மிளகாய்- 24; 16 க்கு விற்ற பீட்ரூட்- 20; 30 க்கு விற்ற நூக்கல் -40; 60 க்கு விற்ற சோயாபீன்ஸ்- 80; எலுமிச்சை- 25; 20 க்கு விற்ற பீர்க்கை 30; 30 க்கு விற்ற டர்னிப் -40; 10 க்கு விற்ற சீனி அவரை- 15; 18 க்கு விற்ற சவ்சவ்- 20; 20 க்கு விற்ற மல்லித்தழை- 30 ரூபாய்.பழங்கள்: 80 க்கு விற்ற ஆப்பிள்- 100; 60 க்கு விற்ற 2 வது ரகம் 80; ஆரஞ்சு- 50; திராட்சை கறுப்பு-40; அன்னாசி பழம்- 20; 60 க்கு விற்ற மாதுளை- 80; அதில் 2 வது ரகம்- 60; சீத்தாப்பழம் 40; கொய்யாப்பழம் -30; சப்போட்டா - 15 ரூபாய்.உழவர் சந்தையில் காய்கறி வரத்தை வைத்து, விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. உழவர் சந்தையை விட, வாரச்சந்தையில் பல மடங்கு விலை விற்கப்படுவதை அதிகாரிகள் தடுக்க வேண்டும்.

**அதே பருப்பு... அதே விலை...**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,03:10 IST

மதுரை:தொடர் மழையிலும் உற்பத்தி பாதிக்கப்படாததால், மதுரையில் அனைத்து பருப்பு விலையிலும் பெரிய அளவில் மாற்றம் ஏற்படவில்லை.சங்க செயலாளர்வெற்றிச்செல்வன் கூறியதாவது :கடந்த வாரமும், இந்த வாரமும் நூறு கிலோ உளுந்தம் பயறு 3700 ரூபாய் முதல் 4200 ரூபாய் வரை விற்கப்படுகிறது. பருப்பு 5800 ரூபாய் முதல் 6600 ரூபாய் வரை விற்கப்பட்ட நிலையில், நேற்று 5700 ரூபாய் முதல் 6500 ரூபாய் வரை விற்கப்பட்டது.துவரம் பயறு 3600 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று 3300 ரூபாய் முதல் 3500 ரூபாயாகவும், பாசிப் பயறு 4300 ரூபாயில் இருந்து 6800 ரூபாய்க்கும், பருப்பு 5800 ரூபாயில் இருந்து 6300 ரூபாய்க்கும் விற்கப்பட்டது, என்றார்.

## *உணவுப் பொருள்கள் சில்லரை விற்பனை ரூ.6.71 லட்சம் கோடியாக அதிகரிக்கும்*

*நாட்டில் உணவுப் பொருள் சில்லரை விற்பனை, வரும் 2025–ஆம் ஆண்டிற்குள் 15,000 கோடி டாலராக (சுமார் ரூ.6.71 லட்சம் கோடி) அதிகரிக்கும் என கே.பி.எம்.ஜி. நிறுவனத்தின் செயல் இயக்குனர் ரமேஷ் ஸ்ரீனிவாஸ் தெரிவித்தார். இது தற்போது 7,000 கோடி டாலராக (சுமார் ரூ.3,13,137 கோடி) உள்ளது.*

*கடந்த பத்து ஆண்டுகளாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், உணவு பொருள் தயாரிப்பு துறையின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது. இருப்பினும், இதே காலத்தில், இத்துறையில் அன்னிய நேரடி முதலீடு 3.3 சதவீதம் என்ற அளவில் மிக குறைவாகவே உள்ளது. நல்ல அளவில் வர்த்தக வாய்ப்புகள் உள்ள இத்துறையில் மேலும் முதலீடுகள் அதிகரிக்க வேண்டும். குறிப்பாக அன்னிய நேரடி முதலீடு சிறப்பான அளவில் அதிகரிக்க வேண்டும் என ஸ்ரீனிவாஸ் மேலும் கூறினார்.*

*மேக்டொனால்டு, ஆர்.கே. ஃபுட்லேண்டு, ஜூபிலண்ட் ஃபுட் ஒர்க்ஸ் ஆகிய நிறுவனங்கள், உணவுப் பொருள்களை பாதுகாப்பதற்கான சேமிப்பு கிடங்குகள் மற்றும்*

குளிர்சாதன கிடங்குகளை அமைப்பதில் அதிக முதலீடு செய்துள்ளன. இதன் காரணமாக, இந்நிறுவனங்கள் விநியோக ஒருங்கிணைப்பு வசதிகளை கொண்டுள்ளன.

## உள்நாட்டில் பற்றாக்குறை: சூரை மீன் ஏற்றுமதி சரிவு



எஸ் சனந்தகுமார்,கொச்சி

கடந்த இரண்டு பருவங்களாக சூரை மீன் பிடிப்பு தொழில் மந்தமடைந்துள்ளது. போதிய அளவு சூரை மீன்கள் கிடைக்காததால் ஏற்றுமதி சரிவடைந்துள்ளது.

பாதிப்பு

பொதுவாக, ஆகஸ்டு மாதத்தில் சூரை மீன்களின் பருவம் தொடங்குகிறது. ஆனால், இந்த ஆண்டு பருவத்தில் குறைந்த அளவிலேயே சூரை மீன்கள் கிடைப்பதால், தொழில் பாதிப்படைந்துள்ளது என மூன் பிஃஷரீஸ் நிறுவனத்தின் தலைமை திட்ட மேலாளர் ஜார்ஜ் கோரக் தெரிவித்தார்.

சென்ற ஆண்டில், மீன்களுக்கான சிறப்பு பொருளாதார மண்டலம் மேற்கொண்ட சூரை மீன்கள் கொள்முதல் கடந்த ஆண்டை விட 32 சதவீதம் குறைந்துள்ளது. இருப்பினும், தற்போது 21,000 டன் சூரை மீன்கள் இருப்பு உள்ளது.

ஜார்ஜ் கோர்க் மேலும் கூறும்போது, “நடப்பு ஆண்டில் சூரை மீன்கள் போதிய அளவு கிடைக்கவில்லை. என்றாலும், கடந்த சில வாரங்களாக விசாகப்பட்டினம் கடல் பகுதியில் ஓரளவு கிடைக்கின்றன” என்றார்.

சூரை மீன்களை பதப்படுத்தும் நிறுவனங்கள் பெரிய அளவில் உற்பத்திப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. இங்கு சூரை மீன்கள் மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக தரம் உயர்த்தப்படுகிறது. இந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருளுக்கு ஜப்பான், ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் அதிக அளவில் தேவைப்பாடு உள்ளது. தற்போது சூரை மீன்கள் கிடைப்பது குறைந்துள்ளதால் இந்நிறுவனங்கள் பாதிப்படைந்துள்ளன.

உற்பத்தி பிரிவுகள்

சூரை மீன்கள் உற்பத்தி குறித்து ஆய்வு செய்ய மீன்வள மதிப்பீட்டு குழு ஒன்றை மத்திய வேளாண் அமைச்சகம் அமைத்துள்ளது. இந்த குழு விரைவில் அதன் அறிக்கையை மத்திய அரசுக்கு தாக்கல் செய்ய உள்ளது.